உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No378/2025

பெயர் :சந்தானம்(அ.சா.4)
தகப்பனார் பெயர் :குருசாமி
கணவர் பெயர் :
வயது :80
கிராமம் :மதுரை ஒத்தக்கடை
வட்டம் :மதுரை
தொழில் :இட்லி வியாபாரம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

01.06.2026

முதல் விசாரணை:

சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு நான் டெய்லர் கடை நடத்தி வந்தேன் என்றால் சரிதான். டெய்லர் கடையும் நடத்தி வந்தேன், இட்லி கடையும் வைத்திருக்கிறேன். என் கடை அருகில் 10 கடை தள்ளி செந்திலாதிபன் நகை அடகு கடை வைத்திருந்தார். ஆஜர் எதிரியை நான் பார்த்ததில்லை. காவலர்கள் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை, சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு மதியம் என் கடைக்கு வரும் போது கூட்டமாக இருந்தது. அப்போது அடிதடி நடந்தது என்று கூறிகொண்டார்கள். நான் முதல் நாள் சென்று மறுநாள் காலை தான் வருவேன். அதனால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

என் டெய்லர் கடை அருகிலேயே, செந்திலாதிபன் அடகு கடை வைத்திருந்தார் என்றால் சரிதான். அவர் கடைக்கு தினம், அவரது மகள் உஷாராணி வீட்டில் இருந்து தான் தினமும் கடைக்கு வருவது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு கடைக்கு வரும் போது, 28.04.2021ம் தேதி மதியம் சுமார் 1.15 மணியளவில் செந்திலாதிபன் கடைக்கு வந்த அ.சா.1 உஷாராணி,

செந்திலாதிபனுடைய கடை கதவு உள்பக்கமாக தாழிட்ட நிலையில் இருந்ததாகவும், டீவி, லைட் ஆன்செய்த நிலையில், கதவை தட்டியும் திறக்காததால், அவர் சத்தம்போட நானும் மற்றும் அருகில் இருந்தவர்களும், கதவை தள்ளி திறந்து பார்க்கபோகும் போது, உஷாராணியின் தகப்பனார் செந்திலாதிபன் என்னை காப்பாத்துமா, காப்பாத்துமா என்று கத்தியும், உள்ளே போகும் போது ஆஜர் எதிரி செந்திலாதிபன் தலையில் அரிவாளை வைத்திருந்ததாகவும், அவரை தூக்கிவிசாரித்த போது, ஆஜர் எதிரி கண்ணில் ஆசிட்டை ஊற்றிவிட்டதாகவும், வாயிலும் ஊற்றிவிட்டதாகவும், அவர் தன் கடையில் ஏற்கனவே நகை அடகுவைத்திருந்து, மேற்படி நகையை கூடுதலாக பணம்கேட்டதற்கு செந்திலாதிபன் ஏற்கனவே கூடுதலாக பணம் கொடுத்துவிட்டேன் என்றும், அதற்கு மேல் கொடுக்கமுடியாது என்று சொல்லவும், ஆஜர் எதிரியானவர் அரிவாள், 3 சுத்தியல், 2 கையுறையுடன் ஆசிட், ஸ்பிரேஉடன் வந்து, ஸ்பிரேயை கண்ணில் தெளித்தும், அரிவாளால் தலையில் வெட்டியும், கொடுங்காயம் ஏற்படுத்தி அருகில் இருந்து, காப்பாற்றி அவரது மருமகன் மூலம் செந்திலாதிபனை மருத்துவமனிக்கு அனுப்பிவைத்துவிட்டு, ஆஜர் எதிரியை அவரது மகள் மூலம் காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லி தானும் காவல்நிலையம் சென்று ஒப்படைத்தேன் என்றும் தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டு, அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.06.01 17:48:45 +0530

Assistant Sessions Judge

Melur